# இலக்கியப் பூங்கா

பதிப்பாசிரியர்:

**முனைவர் ச.முத்துவேல்**

தமிழ்த்துறைத் தலைவர்

என்.ஜி.எம்.கல்லூரி,

பொள்ளாச்சி.



# இலக்கியப் பூங்கா


பதிப்பாசிரியர்

முனைவர் ச. முத்துவேல்

தமிழ்த்துறைத் தலைவர்,

என்.ஜி.எம். கல்லூரி,

பொள்ளாச்சி



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 098.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Ilakkiya Poonga**

Editor: **Dr. S. Muthuvel**

**Tamil Department**

**N.G.M. College, Pollachi**

First Edition: November, 2018

Copyright: Publisher

No.of Pages: 100

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 098.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN. 978 - 81 - 2343 - 816 - 0

Code No. A 4041

**₹ 75.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

**இலக்கியப் பூங்கா**

பதிப்பாசிரியர்: **முனைவர் ச.முத்துவேல்**

**தமிழ்த்துறைத் தலைவர்**

**என்.ஜி.எம். கல்லூரி. பொள்ளாச்சி**

முதல் பதிப்பு: நவம்பர். 2018

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# பொருளடக்கம்

1. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் மானுட வாழ்வியல்

- முனைவர் பொ.மா. பழனிசாமி 7

2. அரசியற் சுதந்திரமும், இலங்கையின் கல்வி வளர்ச்சியும்

- திலானி 15

3. சங்க இலக்கியத்தில் தொழில்முறைகள்

- முனைவர். இரா. விஷ்ணுப்பிரியா 25

4. கவிதை வடிக்கும் கவிதைகள்

- முனைவர் ப. வடிவேல் 34

5. உலகநாதன் ஓதுவித்த வாசகம்

- முனைவர் க. தனலட்சுமி 45

6. சிலப்பதிகாரத்தில் செவ்வியல் பண்புகள்

- முனைவர் ம. சித்ரகலா 51

7. சேக்கிழாரின் பெயர் சுட்டாப் பெண்கள்

- முனைவர் ஆ. மகாலட்சுமி 63

8. தூது செல்லாயோ கிளியே!

- முனைவர் பே. மகேஸ்வரி 70

9. நாட்டுப்புறவியலில் தொழில்சார் கலைகள்

- பேரா. ர. சூர்யா 82

10. கவிஞர் சிற்பியின் 'தும்பைப் பூ மனிதர்கள்'

- முனைவர் க. நஞ்சையன் 93

## 7. சேக்கிழாரின் பெயர் சுட்டாப் பெண்கள்

- ஆ. மகாலட்சுமி

பக்தி இலக்கியம் மக்களைப் பாடாது இறைவனைப் பாடுவது. இறைவனைப் பாடுவது என்னும்போது திருக்கோவில்களைப் பாடுவது என்பது பொருளன்று. இறையனுபவத்தைப் பாடுவது என்பது தான் பொருள். இவ்விறையனுபவம் மெய்யுணர்வனுபவம். பொதுவாக இக்கவிஞர்களை மெய்யுணர்வுக் கவிஞர்கள் என்பர்.

உலகம் முழுவதும் பல்வேறு சமயங்கள் உள்ளன. பிற உயிர் பெற்றிடும் உணர்வுகளைத் தன்னுணர்வாகப் பாவிக்கத் தொடங்கிய போது அறவுணர்வு தோன்றி அருளுணர்வாக மலர்ந்தது. சமயங்கள் மனிதனைப் பக்குவப்படுத்துவதற்காக மனிதர்களால் தோற்றுவிக்கப் பட்டவை. நமது சைவ சமயம் மிகமிகத் தொன்மையானது. சைவத்தின் மேற்சமம் வேறில்லை என்பது நமது ஆன்றோர் வாக்கு.

சிவபெருமானின் திருத்தொண்டர்கள் பெருமை சொல்லும் பெரியபுராணம் சிவபூசை செய்து சிறந்தோரின் வரலாறுகளைக் கூறும். சிவபூசைக்கு ஆண், பெண் என்ற பாகுபாடில்லை. அறுபத்து இரண்டு நாயன்மார்களின் சிவபூசைக்கு ஈடானது புனிதவதியாரின் சிவபக்தி, இந்த நாயன்மார்களின் சிவபூசைக்குத் துணை நின்ற அடியார்கள் எனப் பார்த்தால் அவர்கள் பெண்களே. ஈடு இணையற்ற இவர்களின் தியாகத்தாலும் பொறுமையாலும் சிவநம்பிக்கையாலும் மட்டும் நாயன்மார்களின் சிவபூசை சிறந்து விளங்கியது. சேக்கிழார் இவர்கள் பெயர்களை வெளிப்படச்சுட்டி, சிறப்பிக்கவில்லை எனினும், நாயன்மார்களின் தொண்டு சிறக்கப் பின்புலமாகத் துணைநின்றவர்கள் இவர்களே.

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான"

(தொல்காப்பியம் - பொருள் - பொருளியல் - 13)

எனத் தொல்காப்பியம் அடக்கம், மனவலிமை, நேர்மை, தகுவன கூறல் தெளிந்த அறிவு, அருமைபாடு எனும் குணங்கள் பெண்பாலார்க்குரியன எனக் குறிப்பிடுகின்றது. பெரிய புராணப் பெண்கள் இவ்விலக்கணத் திற்கு உரியவர்களாக மட்டுமன்று. அதற்கேற்ப வாழ்ந்து காட்டியவர் களும் ஆவர். தத்தம் கணவனாரின் இலட்சிய வாழ்க்கைக்கு உறுதுணையாக மட்டுமின்றி, அவர்களது இறையருளின் பெற்றிமையை

உலகோர் உணரவும் செயல்பட்டவர்கள். ஒரு மனைவியிடம் குடும்பத் திற்கேற்ற நல்ல குணங்கள் இல்லையெனில் வாழ்க்கையில் அடைந்த எந்தப் பெருமையும் சிறப்பே அல்ல என்பதனை வள்ளுவரும்,

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

(திருக்குறள் 52)

என எடுத்துரைக்கின்றார். இப்பெண்டிர் எஞ்ஞான்றும் தங்களது பெருமைகளைத் தன் கணவன் முன்போ, மற்றையோர் முன்போ பெருமைப்படக் கூறியதில்லை. அதற்கான செயற்பாடுகளைக் கூட அவர்கள் மேற்கொண்டதில்லை. இச்செயலானது தொல்காப்பியம் குறிப்பிடும்,

"தற்புகழ் கிளவி கிழவன் முற்கிளத்தல்
எத்திறத்தானும் கிழத்திக்கில்லை.
முற்பட வகுத்த இரண்டலங்கடையே"

(தொல்காப்பியம் பொருள் - கற்பியல் - 39)

என்ற நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாய் அமைகின்றது.

அடியார்களின் மனைவியாரைச் சுட்டும்போது பெயரில்லாமல் சுட்டியே சேக்கிழார் கூறிச் செல்கிறார். அவர்கள் செய்த செயற்கருஞ் செயலின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படுகின்றனர்.

### 1) அப்பூதி அடிகளார் துணைவியார்

சோழநாட்டின் திங்களூரில் சைவ அந்தணராகிய இவர் திருநாவுக்கரசரிடம் அளவிலா அன்பு கொண்டவர். திருநாவுக்கரசரை இறைவனாகவே எண்ணி வாழ்ந்தவர். அவர் பெயராலேயே அறப் பணிகள் பல செய்து வாழ்ந்தவர். திங்களூர் வந்த திருநாவுக்கரசருக்கு அமுது படைக்க விரும்பி ஆயத்தம் செய்தபோது, வாழைக் குருத்து அரியச் சென்ற தம் மூத்த திருமகனைப் பாம்பு தீண்டியது. விஷம் ஏறுமுன் விரைந்தோடி ஒன்றும் சொல்லாது குருத்தைக் கொடுத்து வீழ்ந்த நஞ்சின் மாண்ட தன் மகனைப் பாயில் சுற்றி மறைத்துத் திருநாவுக்கரசரை விருந்துண்ண எழுந்தருளச் செய்தனர். திருநீறளிக்க மூத்த குமாரனையும் நாவுக்கரசர் அழைக்க 'அவன் இங்கு இப்போது உதவுவான்' என்பார் அப்பூதியடிகள். உடனே திருநாவுக்கரசர் தம் திருவருளால் நடந்ததுணர்ந்து திருப்பதிகம் பாட நஞ்சு நீங்கியது.

கணவனின் கடமைக்காகப் பிள்ளைப் பாசத்தையும் பெண் வெல்லும் திண்மைக்கு அடிப்படைக் காரணம் கணவனின் நற்பண்புகளும், அவனிடமுள்ள நம்பிக்கையும், கணவனையும் மிஞ்சிய சிவபக்தியுமே என்பதாகும்.

## 2) திருநீலகண்டர் துணைவியார்

தில்லையில் சிவனடியார்களுக்குத் திருவோடு செய்து கொடுத்து திருத்தொண்டாற்றி வந்த திருநீலகண்டர் இன்பத்துறையில் எளியரானார். இதனை அறிந்த மனைவியார் அவரது தீநெறியைத் திருத்த வேண்டி "எம்மைத்தீண்டு வீராகில் திருநீலகண்டம்" என்று சபதமிட்டார். சிவன் மேலுள்ள பக்தியால் நீலகண்டரும் அது முதல் மனைவியை மட்டுமின்றிப் பிற பெண்களையும் தாயெனவே போற்றினார். மனைவியாரும் கணவர்க்குரிய பணிகளைச் செய்து, உடனுறை வாழ்வை மட்டும் நீக்கி, இதனை அயலார் அறியாவண்ணம் இளமை முதல் முதுமை வரையும் வாழ்ந்தனர். அடியவர்க்கு அருள எண்ணிய சிவபிரான் திருப்புலீச்சுர திருக்குளத்தில் மூழ்கி எழுந்த தம்பதியருக்கு, ஐம்புலனை, இளமையைத் தொலைத்ததால் மாறா இளமை தந்து இப்பூலோகத்தில் மீண்டும் வாழச்செய்து பின்பு சிவலோகமடையச் செய்தார். விவாகரத்துக்கள் மலிந்திருக்கும் இக்காலத்தில், மக்கள் இந்நாயனாரது வாழ்வியல் நுட்பத்தை உணர்ந்தால் இல்லறப் பிளவு ஏற்படாது. ஏனெனில்,

> **"அறன் எனப்பட்டதே இவ்வாழ்க்கை அஃதும்**
> **பிறன் பழிப்பதில்லாயின் நன்று"** **(திருக்குறள் - 49)**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப பழியின்றி வாழ்வதே உயர்வாகும். பெண்கள் இல்லறக் கடமைகளைச் செய்து, பிறர் பழித்துப் பேசுதற்கு இடம் தராது வாழ்வாராயின் கலாச்சாரச் சீரழிவு, பண்பாட்டுச் சிதைவுகள் ஏற்படாது. நெறிபிறழ்ந்த கணவரை, நெறிப்படுத்திய தாலேயே அவர் நாயன்மார்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அளவிற்கு உயர்த்திய பெருமைக்குரியவர் அவரது மனைவியே. மனைவி காத்த பொறுமையும், செயலுமே நாயன்மாரது உயர்வுக்கும் இறையருளுக்கும் காரணமாயிற்று.

## 3) இயற்பகை நாயனார் துணைவியார்

சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டின வணிகராகிய இயற்பகை இல்லற ஞானி. சிவ அடியார் விரும்புவது எதுவாயினும் இல்லை என்னாது அளித்தலே அவர் சிவத்தொண்டு. ஒருநாள் சிவபெருமான் வேதியராய் இவரிடம் வந்து, 'ஒரு பொருள் நாடி இங்கு வந்தோம்' எனக் கூற இயற்பகையார், 'நீர் விரும்பும் எப்பொருளாயினும் அஃது அடியவர் உரிமை என்று கூறினார். அடியாரே, "யாம் உம் மனைவியை நாடி இங்கு வந்தோம்" என உரைக்க, அது எனது புண்ணியப்பயன், என மனைவியிடம் இது பற்றிக் கூறியபோது மனைவியாரும், கலங்கி மனந்தெளிந்து பின்பு ஏற்றுக் கொண்டார். உலகியலில் இது சாத்திய மில்லையாயினும் அருளியலில் இது சாத்தியம்.

**சிவஞானபோதம்**

> "மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
> ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

எனக் குறிப்பிடுகின்றது. இவ்வம்மையார் உலகியலை நினைத்துக் கலங்கியும், அருளியலில் சிவனடியார் சிவனே என்பதாலும், அடியார்க்குத் தொண்டு செய்தலே பெரும்பேறென நினைத்துத் தெளிந்தும் கணவன் கூற்றுக்கு ஒப்புதலாக நடந்தார். இச்சூழலில் இயற்பகையும் மனைவியை வணங்கியதாய்ச் சேக்கிழார் சொல்வார். ஊரையும் உறவினரையும் கடந்து செல்ல வேதியர் இயற்பகையைத் துணைக்கழைக்க, இப்பணியைத் தானே செய்ய முற்படுகிறார்.

இந்நிகழ்வு கண்டு எதிர்த்த உறவிற்கு அஞ்சினார் போல வேதியர் பார்க்க 'வேதியரை அஞ்சவேண்டாம் இயற்பகைவெல்லும்' என்பாள் இயற்பகை மனைவி. சேக்கிழாரின் நயம் இங்கு வியப்பூட்டுவதாகிறது.

எல்லையைக் கடந்தும் 'நீ மீண்டு செல்' என அந்தணர் உரைக்க இயற்பகை மீண்டு செல்கிறார். செய்வதற்கு அரிய செயல் செய்த அத்தொண்டன், பொய்தரும் உள்ளம் திரும்பியும் பார்க்காமல் போனான்" என்று இயற்பகை மீண்டு செல்வதைச் சிவபிரான் வாக்காகச் சேக்கிழார் சொல்வார்.

சாதாரண மனிதர்களால் சாதிக்க முடியாததை அசாதாரண மனிதர்கள் செய்வர் என்பதற்கேற்ப, செயற்கரிய செய்கை செய்து அருளுலகில் பேரிடம் பெற்றவர்கள் நாயன்மாரும் அவரது மனைவியுமாவார்.

> **"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்**
> **செயற்கரிய செய்கலா தார்"**

**(திருக்குறள் - 26)**

என்ற குறள் நெறிக்கேற்ப இவர்தம் வாழ்வியல் அமைகின்றது.

## 4) இளையான்குடி மாறநாயனாரின் துணைவியார்

வேளாளர் மரபிலே தோன்றியவர் மாறனார். அடியவருக்குச் சோறிடுவதை ஒரு பெருந்தொண்டாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

> **"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
> **வேளாண்மை செய்தற் பொருட்டு"**

**(திருக்குறள் - 81)**

என்பதற்கேற்ப வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்தவர்கள் மாறனாரும் அவரின் மனைவியும் ஆவார்.

"அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்" என்ற சங்க இலக்கியத் தலைவிக்கு சான்றாவார் மாறர் மனைவி. சிவனடியார் ஒருவர் இரவு வேளையில் தனக்கு பசி என்று மாறனார் வீட்டை அடைகிறார். ஆனால் வீட்டில் எந்த உணவுப் பொருளும் இல்லை. மாறனார் மனைவி கணவனிடம் பகலில் விதைத்த செந்நெல்லை சேகரித்து வர வழி கூறி, கணவனார் வரும் வரை வாயிலில் நின்று வாங்கி, ஈர நெல்லை வறுத்து குத்தி உலையிலிட்டுச் சமைத்து, ஒரே கீரையைக் கொண்டு பல்வகைக் கறிகளைச் சமைத்து அந்நள்ளிரவிலும் விருந்தோம்பல் செய்தார். இவரது விருந்தோம்பும் மாண்பும், விருந்தினருக்கு ஏற்பன செய்யும் செயலும் வள்ளுவரின் வாழ்க்கைத் துணை நலமாண்பையும், தமிழரின் விருந்தோம்பலுக்கான முத்திரையையும் பதிக்கின்றது. மனைவியாரின் இத்தகைய அன்புடைய செயலே இளையான்குடி மாறனாரை, நாயன்மார் வரிசையில் ஏற்றம் பெறச் செய்தது.

### 5) குங்குலியக்கலய நாயனாரின் துணைவியார்

சோழநாட்டில் மறையவர் குலத்தில் தோன்றியவர் இவரது இயற்பெயர் கலயனார். திருக்கடவூர் கோவிலில் நாளும் இறைவர்க்குக் குங்குலியத் தூபமிடும் தொண்டு செய்பவர். வறுமைக் காலத்தும் இடையறாது தூபமிட்டவர். உணவுக்கே வழியின்றி மக்களும் சுற்றமும் பட்டினியால் வாட, பெண்கள் செய்வதற்கும் அச்சமுறும் செயலான தனது தாலியைக் கழற்றிக் கணவனார் கையில் கொடுத்து நெல்வாங்கி வர அனுப்பினார். அவரோ, எதிரே வண்டியில் வந்த குங்குலியப் பொதியை தாலி கொடுத்து வாங்கி திருக்கோவிலையடைந்தார். பசியால் வாடித் துவண்டு உறங்கிய மனைவி மக்களிடம் அருள்கொண்ட இறைவன் அடியவர் வீடு முழுவதும் பொற்குவியலாலும் நெற்குவியலாலும் நிறைத்தார். இப்பொருளை ஏற்ற மனைவி உணவு சமைத்து விருந்தினருக்கு இட்டார். கலயர் மனைவி தன் கணவரது தொண்டு நெறிக்கு எதிர்ப்போ, சலிப்போ எக்காலத்திலும் காட்டியதில்லை. கணவனார் கருத்தறிந்து ஒழுகும் காரிகையாவார். இச்செயல் நலமே இவர்களது இல்லற மாண்பை இறைவன் உலகறியச் செய்தான். கருத்தொருமித்த வாழ்வியலும் கணவன் இலட்சியத்திற்கு உறுதுணையும் செய்ததால் தான் இவர்கள் புராணத்துள் போற்றப்படுகின்றனர்.

### 6) கலிய நாயனார் துணைவியார்

தொண்டை நாட்டின் திருவுற்றியூரில் கூலிக்கு எண்ணெய் பெற்று அதை விற்றுத் திருவிளக்கு ஏற்றிச் சிவபூசை செய்பவர் கலியநாயனார். செல்வம் அனைத்தும் சென்றபின் உரிய பொருள் அனைத்தும் விற்றுச்

சிவத்தொண்டாற்றினார். வேறு பொருளில்லாத போது மனைவியை விற்கத் துணிந்தார். வாங்குவாரில்லையாதலால் மனம் மிக நொந்து தனது இரத்தத்தால் விளக்கேற்றத் துணிந்தார். அப்போது இறைவன் தடுத்தாட்கொண்டு அருள் செய்தார். கலிய நாயனாரின் மனைவி தான் பிறர்க்கு அடிமையாக விற்கப்பட்டாலும் கணவனாரின் இலட்சியத்திற்கு மாசு வராமல் காத்தலில் இவரது பங்கு பெரியது.

> ''அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
> இன்புற்றார் எய்துஞ் சிறப்பு (திருக்குறள் - 75)

என்ற குறள் நெறிக்கு ஏற்ப வாழ்ந்தவர்.

## 7) ஏயர் கோன் கலிக்காமர் துணைவியார்

ஆண்டவனைத் தூதுவிட்ட சுந்தரரின் செயல் ஒவ்வாதென்ற கலிக்காமர்க்கு சிவன் ஏவலால் சூலை நோய் பெற்று வருந்திய போது அது தீர்க்கச் சுந்தரர் தேவையில்லை என்று, வாளால் தன் வயிற்றைக் கிழித்து மாண்டார். தானும் உயிர் துறக்கத் துணிந்த துணைவியார், வன்தொண்டர் வருகையை அறிந்து உறவினரை அழாதிருக்கக் கட்டளை இட்டுச் சுந்தரரை எதிர்கொள்ள, உள் வந்து அமர்ந்த சுந்தரர் கலிக்காமரைக் காண விழைய, கலிக்காமர் உறங்குகிறார் என்று சொல்லப்பட்ட செய்தியால் தெளியாமல், அவரைக் கண்டு நிலை உணர்ந்து, தானும் உயிர் துறப்பேன் என்று வாளெடுக்க, கலிக்காமர் உயிர் பெற்றெழுந்தார்.

கலிக்காமர் மனைவியின் சிவநம்பிக்கை, மன உறுதி சிவனடியார் சுந்தரர் மீதிருந்த அசையாத நம்பிக்கை இவையாவும் கலிக்காமரின் உயிரை மீட்டெடுத்துச் சுந்தரரின் அற்புதச் செயலுக்குத் துணை நின்றது.

## 8) திருநீலநக்க நாயனார் துணைவியார்

சோழநாட்டில் சாத்த மங்கையில் அயவந்தி நாதர் மேல் சிலந்தி ஒன்று விழ அது கண்ட திருநீல நக்க நாயனார் துணைவி இறை அன்பால் பதைத்து அதை ஊதித் துமிக்கச் சினந்த நாயனார், மனைவியைத் துறந்து நீங்கினார். வீடு செல்ல அஞ்சிய துணைவி திருக்கோவிலிலேயே தங்க நாயனார் கனவில் தோன்றிய இறைவன், ஊதித் துமித்த இடம் கொப்புளங்கள் இல்லாமல் இருப்பதையும் மற்ற இடத்தில் கொப்புளங்கள் காட்டி, நாயனார் மனைவியின் அன்பை அங்கீகரித்தார். மனைவியின் இறை அன்பால் தரிசனப்பேறு பெற்றார் திருநீலநக்க நாயனார்.

## 9) மானக்கஞ்சாற நாயனாரின் மகள்

மானக்கஞ்சாற நாயனார் கஞ்சாற்றூரிலே தோன்றினார். அவர் வேளாண் குலத்தலைவர் சேனாதிபதி தனது உடைமையெல்லாம்

சிவனடியார் உடைமை என்று கருதும் பெருநிலையில் நின்றவர். எதையும் குறிப்பறிந்து கொடுப்பவர். திருவருளால் அவருக்கொரு பெண்மகவு பிறந்தது. உற்ற வயதடைந்த அப்பெண்ணை ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு மணம் முடிக்க எண்ணினார்.

சிவபெருமான் மாவிரதக் கோலந்தாங்கி, மானக்கஞ்சாற நாயனார் வீட்டுள் நுழைந்தார். நாயனார், அவரை வணங்கி எதிர் கொண்டு தனது புதல்விக்குத் திருமணம் எனக் கூறித் தமது புதல்வியாரை அழைத்து வந்து முனிவரைத் தொழச் செய்தார். மாவிரதியார், பெண்ணின் அழகிய கூந்தல் நமது பஞ்சவடிக்கு உதவக்கூடும் என எண்ணினார்.

மாவிரதியாரின் எண்ணம் அறிந்த நாயனார் தமது புதல்வியின் கூந்தலை அறுத்து முனிவரிடம் வழங்கினார். இச்செயல் தந்தையின் சிவனடியார் பணியிலும் அதற்குடன்பட்ட மகளின் மன உறுதியும் செயற்கரிய செயலைக் காட்டுகிறது.

**10) சடங்கவி சிவாச்சாரியார் மகள்**

சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் பிறந்து வளர்ந்த நம்பியாரூரர், மணப்பருவம் அடைந்தபோது புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளுடன் திருமணம் உறுதி செய்யப்பட்டுத் திருமண நாள் குறிக்கப்பட்டது. திருமணக் கோலம் கொண்டு மணப்பந்தல் அடைந்த நம்பியாரூரைத் தடுத்தாட்கொள்ள முதிய அந்தணராய் இறைவன் வந்து வழக்குரைத்து ஆட்கொண்ட வன்தொண்டனை நாமம் சூட்டிப் "பித்தா பிறைசூடி" எனப் பாட வைத்தார். புத்தூரில் திருமணம் குலைந்த சடங்கவி சிவாச்சாரியார் புதல்வி வன்தொண்டர் திருவடியை நெஞ்சில் பதித்துச் சிவபதம் அடைந்தார்.

பெரிய புராணத்துப் பெண்கள் வெளியில் தெரியாத வேர்களாய் மனையறம் போற்றிய மாண்புடையவர்கள், தனது கற்பு நெறி காத்துத் தன் கணவனையும், தந்தையையும் அவளது புகழையும் காத்து ஓம்பும் பெற்றிமையாளர்கள்.

**அழகான பெண் ஒரு இரத்தினம்**
**கண்ணியமான பெண் ஒரு பொக்கிஷம்**

என்ற அன்னிபெசண்ட் அம்மையாரின் கூற்றுக்கேற்ப திகழ்ந்தவர்கள். அன்புநெறி, அருள் நெறி, தொண்டு நெறி விருந்தோம்பல் நெறி எனப் பல்வகை நெறிகளைக் கைக்கொண்டு மனைவியாக மகளாக இருந்து செயற்கரிய செயல் செய்து உலகோர்க்கு உணர்த்தியவர்கள்.